செ.வெ.எண்: 573 நாள்: 03.09.2019

**புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் ஓய்வூதியர் குறைதீர்க்கும் கூட்டம் நடைபெறவுள்ளது.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் ஓய்வூதியர் குறைதீர்க்கும் கூட்டம் நடைபெறவுள்ளது. இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் அனைத்து அரசுத் துறைகளில் பணியாற்றி ஓய்வு பெற்ற ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களின் ஓய்வூதியப் பலன்கள் தொடர்பான குறைகளை கேட்டறிந்து தீர்வு காணும் வகையில் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் **18.10.2019** வெள்ளிக்கிழமை அன்று காலை 10.30 மணியளவில் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் மற்றும் சென்னை ஓய்வூதிய இயக்குனர் அவர்கள் முன்னிலையில் ஓய்வூதியர் குறைதீர்க்கும் கூட்டம் நடைபெறவுள்ளது.

இது தொடர்பாக ஓய்வூதியப் பலன்கள் குறித்து குறைகள் ஏதேனும் இருப்பின், மனு செய்ய விரும்புவோர் கீழ்காணும் படிவத்தில் தெளிவாக எழுதி அதனை தவறாமல் இரட்டைப்பிரதிகளில் எதிர்வரும் **20.09.2019** ஆம் தேதிக்குள் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்திற்குக் கிடைக்குமாறு அனுப்பி வைத்திட கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மனுதாரர் பெயர் மற்றும் முகவரி, ஓய்வூதிய ஆணை எண், அரசு அலுவலர் பெயர், அரசு அலுவலர் கடைசியாக பணிபுரிந்த பதவி மற்றும் அலுவலகம், அரசு அலுவலர் ஓய்வு பெற்ற அல்லது இறந்த தேதி, தீர்வு செய்ய வேண்டிய கோரிக்கையின் விவரம், இதற்கு முன் மனு செய்திருந்தால் அதன் விவரம், எந்த அரசு அலுவலரால் கோரிக்கை தீர்வு செய்யப்பட வேண்டும் உள்ளிட்ட தகவல்களுடன் மனு அளிக்க வேண்டும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**